# கலைஞரும் நானும்

97

"முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர், ஆட்சியில் இருந்தபோதும், எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோதும், அவரை அடிக்கடி சந்தித்திருக்கிறேன். அண்ணன் சண்முகநாதன் அவர்களிடம் தலைவரை சந்திக்க அனுமதி கேட்டால், 'உங்களுக்கு என்ன அனுமதி? போய்ப் பாருங்கள்' என்பார்" என தனது நினைவுகளைப் பகிர்கிறார், எழுத்தாளர் ஏர்வாடி எஸ்.ராதாகிருஷ்ணன்.





# "திருக்குவளை இருந்தால்தான் கவிதை வரும்!"



**கலைமாமணி ஏர்வாடி எஸ்.ராதாகிருஷ்ணன்**



என் நினைவுகளில் நிலைத்து இருக்கின்ற கலைஞர் குறித்து சொல்வது என்றால் ஒரு தனி நூலே எழுதலாம். அவ்வளவு அனுபவங்கள், அவ்வளவும் பசுமையான நினைவுகள். அவரைச் சந்திக்க படி ஏறிப் போய், கதவைத் திறப்பதற்கு முன்பே, 'வாங்க ஏர்வாடி' என கரகரத்த குரல்தான் வரவேற்கும். 'கவிதை உறவு' இதழ் கடந்த 1987-ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது. சிற்றிதழ்தான் என்றாலும், பெருத்த வரவேற்பைப் பெற்றிருக்கிறது. கலைஞருக்கு, அதைத் தொடர்ந்து அனுப்பிக் கொண்டிருந்தேன்.

ஒருமுறை அவரைச் சந்தித்தபோது 'கவிதை உறவு' இதழ் உங்களுக்கு வருகிறதா என்ற அடுத்த கேள்வியை நான் கேட்பதற்கு முன்பு, "உங்களின், 'என் பக்கம்' கட்டுரை வாசிக்கிறேன்" என்றதுடன், "வாழைப்பழத்தில் ஊசி ஏற்று வதைக் கேள்விப்பட்டிருக்கிறேன். நீங்கள் வாழைப்பழத்திற்குச் சேதாரம் இல்லாமல், கடப்பாரையையே ஏற்றி விடுகிறீர்கள்" என்று பாராட்டினார். அந்தக் கட்டுரையை எழுதத் தொடங்கும் போதெல்லாம், இந்த வாக்கியம் என் நினைவுக்கு வந்து போகும்.

'கவிதை உறவு' இதழில் 'மனதில் பதிந்தவர்கள்' என்று தொடர் எழுதி வருகிறேன். ஒரு முறை, கலைஞருடனான என் தொடர்பையும் அனுபவத்தையும் எழுதி இருந்தேன். அந்த இதழை அவரிடம் நேரில் கொடுப்பதற்காகச் சென்றிருந்த நாளில் அவர் பரபரப்பாக இருந்தார். நான் 'ஓய்வாகப் படியுங்கள்' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டபோது, உட்காரச் சொல்லிவிட்டு, முழுக் கட்டுரையையும் படித்து முடித்த பிறகு ஒரு புன்முறுவலோடு, 'மகிழ்ச்சி' என்று கூறி அனுப்பி வைத்தார்.

பொதுவாக, பிரபலங்களுக்கு எதையாவது படிக்கக் கொடுத்தால், வாங்கி வைத்துக் கொண்டு நம்மை அனுப்பி விடுவார்கள். ஆனால், எழுதியவரை உட்காரச் செய்து, அவர் முன்பே படிப்பது என்பது ஒரு பண்பாடு. எழுதியவரை எதிரில் அமர்த்திக் கொண்டு வாசிக்கும்போது, கட்டுரையின் உண்மைத் தன்மையை நாசூக்காக உறுதி செய்து கொள்ள முடியும். கதை அளந்து இருந்தால், கையோடு கேட்டு விடலாம். இதுதான் கலைஞரிடம் இருக்கிற சிறப்பான நுட்பம்.

## கழகத்துக்கு அழைப்பு

ஒருமுறை கலைவாணர் அரங்கில், கா.வேழவேந்தன் அவர்களின் நூல் வெளியீட்டு விழா, கலைஞர் தலைமையில் நடைபெற்றது. அந்த நிகழ்ச்சியை நான் தொகுத்து வழங்கினேன். நிகழ்ச்சியின் தொடக்கத்திலேயே

"சில கவிஞர்களுக்கு ஒரு குவளை இருந்தால் தான் கவிதை வரும். எனக்கெல்லாம் திருக் குவளை இருந்தால்தான் கவிதை வரும்" என்று தொடங்கியதும், திரும்பிப் பார்த்தவர் தொடர்ந்து என் பேச்சை மிகவும் ரசித்தார்.

விழாவில் கலந்துகொண்ட தென்கச்சி சுவாமிநாதன் அவர்களைப் பேச அழைக்கும் முன், என் வானொலி அனுபவம் ஒன்றைப் பகிர்ந்தேன். சென்னை, வானொலியில் ஒளிபரப்பான என் முதல் படைப்பை பாராட்டி, 45 அஞ்சல் அட்டைகள் வந்திருப்பதாக தொலைக்காட்சி இயக்குநர் காட்டினார். என் முகத்தில், எந்த மகிழ்ச்சியும் இல்லை. சாதாரணமாகவே இருந்தேன். 'இத்தனை பாராட்டுகள் வந்திருக்கின்றன முகத்தில் மகிழ்ச்சியைக் காணோமே' என்றார் அவர். 'சார், பேங்கில் என்னோடு வேலை பார்க்கிற 100 பேருக்கு கார்டு வாங்கிக் கொடுத்து, பாராட்டி எழுதி போடுங்கடா' எனக் கொடுத்தேன். 45 பேர் தான் எழுதி இருக்காங்க. மீதி 55 கடிதம் என்னாச்சு என்கிற கவலை சார்' என்று சொன்னதும், கலைஞர் உட்பட அரங்கமே அதிர்ந்து சிரித்துக் குலுங்கியது.

தொடர்ந்து பேச வந்த தென்கச்சி சுவாமிநாதன் அவர்கள், "இது ஏர்வாடியாரின் அனுபவமின்மையைத்தான் காட்டுகிறது இந்தக் காலத்தில் யாரையும் நம்பி, 100 கார்டு களையும் கொடுக்கக் கூடாது. ஏர்வாடி என்னைக் கேட்டிருக்க வேண்டும். நான் என்னுடைய முதல் நிகழ்ச்சியைப் பாராட்டி வாங்கி வந்த 100 கார்டுகளையும் நானே எழுதிப் போட்டுவிட்டேன், அவரும் அப்படியே செய்திருக்க வேண்டும்" என்றபோதும் அரங்கம் அடங்கப் பல நிமிடங்கள் ஆனது.

கலைஞரால் சிரிப்பை அடக்க முடியவில்லை. கலைஞர் அவர்கள் உரையாற்றுகிறபோது "ஏர்வாடியாரும் தென்கச்சியாரும் பெரிய பேச்சாளர்கள் கிடையாது என்றாலும், கூட்டத்தை எப்படிக் கவர வேண்டும் என்ற

> **"வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதைக் கேள்விப்பட்டிருக்கிறேன். நீங்கள் வாழைப்பழத்திற்குச் சேதாரம் இல்லாமல், கடப்பாரையையே ஏற்றி விடுகிறீர்கள்!"**

வித்தை அறிந்திருக்கிறார்கள். நடுவண் அரசு பணிகளில் இருக்கிற இவர்கள், தம் ஓய்வுக்குப் பிறகு தி.மு.கழகத்தில் இணைந்து கொள்ள வேண்டும்" என்று எங்களுக்குப் பெரிய வரவேற்பைப் பெற்றுத் தந்தார்.

## நிதி திரட்டும் உத்தி

ஒருமுறை அனைத்திந்திய தமிழ் எழுத் தாளர்கள் சங்கத்தின் சார்பில் எழுத்தாளர் நலநிதி அறக்கட்டளைக்கு நிதி திரட்டும் நிகழ்ச்சி நடத்தினோம். கலைஞர் கலந்து கொண்டு நிதியை பத்திரிகையாளர் சாவி அவர்களிடம் வழங்குவது என ஏற்பாடு செய்திருந்தோம். நிகழ்ச்சியில் சாவி, தனது **'வாஷிங்டனில் திருமணம்'** நாடகத்தை நடத்தித் தந்தாலும், நாங்கள் எதிர்பார்த்தது போல நிதி வசூலாகவில்லை. வரவுக்கும் செலவுக்கும் சரியாக இருந்தது. என்ன செய்யலாம் என சங்கப் பொதுச் செயலாளராக நான் யோசித்துக் கொண்டிருந்தபோது, சில எழுத்தாளர்கள் கலைஞருக்கு மேடையில் பொன்னாடை அணிவிக்கவும், புகைப்படம் எடுத்துக் கொள்ளவும் வேண்டினர். அப்போது, என் மனத்தில் தோன்றிய ஒன்றை கலைஞரின் கவனத்துக்குக் கொண்டு சென்றேன். அனுமதி கிடைத்தது.

"சங்கத்துக்கு நன்கொடை தருபவர்கள் மட்டும் கலைஞருக்குப் பொன்னாடை போர்த்த அனுமதிக்கப்படுவார்கள்" என்று சொல்லிவிட்டு, நான் முதல் பொன்னாடையை அணிவித்துவிட்டு, அன்பளிப்பைக் கொடுத்தேன். உடனே கலைஞர், 'போய் எவ்வளவு தொகை என்று அறிவித்துவிட்டு வாருங்கள்' என்று சொன்னார். பெரிய தொகை இல்லை என்றாலும், அறிவிக்கும்போது கௌரவமாக இருக்கும் என்று, கொஞ்சம் அதிகப்படுத்தி, '500 ரூபாய்' என்றேன்.

அப்படியே ஒவ்வொருவரின் தொகையையும் அதிகமாகச் சொல்லிக் கொண்டே இருந்தேன். பொன்னாடை அணிவித்து, போட்டோ எடுத்துக் கொண்டவர்கள் கொடுத்த தொகை 75 ஆயிரம் ரூபாய் வந்தது. நிகழ்ச்சியில் கலந்துகொண்ட இந்தியன் வங்கித் தலைவர் எம்.கோபாலகிருஷ்ணன் 25 ஆயிரம் ரூபாய் வழங்கி, ஒரு லட்சம் ரூபாய் ஆக்கினார். கலைஞர், அருகில் அமர்ந்திருந்த என்னிடம், "நிதி திரட்டுவது நுட்பமான ஒரு கலை. பொன்னாடை போர்த்தி விட்டுப் படத்தை எடுத்துக் கொண்டு, அஞ்சோ பத்தோ கொடுத்து விட்டுப் போய்விடுவார்கள். தொகையைக் குறிப்பிட்டுச் சொன்னால்தான் நிறைய தருவார்கள்" என்று சொல்லிவிட்டு, அவர் சிரித்தபோதுதான், நானும் புரிந்து கொண்டேன், 'கலைஞர் கலைஞர்தான்'.

என் மூத்த மகன் கௌரிசங்கரின் திருமண அழைப்பிதழை எடுத்துக்கொண்டு பேராசிரியர் டாக்டர் சந்திரசேகர் அவர்களுடன் கலைஞரை கோபாலபுரம் இல்லத்தில் சந்தித்தோம். உற்சாகமாக வரவேற்றார். அழைப்பைப் பார்த்து வாழ்த்து தெரிவித்ததுடன், 'வரா விட்டால் என்ன செய்வீர்கள் ஏர்வாடி?' என்றார். 'என்ன செய்வோம்? மறுநாள் காலை மணமக்களை அழைத்துக் கொண்டு வந்து விடுவோம்" என்றேன். புன்முறுவல் பூத்தார்.

அன்று மருத்துவப் பரிசோதனைக்காக ராமச்சந்திரா மருத்துவமனைக்குச் செல்வதாகக் கூறியவர், திருமணத்தன்று காலை, மண மக்களுக்குத் தன் கைப்பட எழுதிய ஒரு வாழ்த்துக் கடிதம், இனிப்பு, சந்தன மாலைகள் அனுப்பியதோடு அன்று காலை 'முரசொலி'யில் "அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர்கள் சங்கப் பொதுச்செயலாளர் ஏர்வாடி எஸ்.ராதா கிருஷ்ணன் இல்லத் திருமணம், மணமக்களுக்கு முதல்வர் கலைஞர் வாழ்த்து" என்ற தலைப்பிட்டு வாழ்த்துச்செய்தியும் வழங்கிச் சிறப்பித்திருந்தார்.

## கவிதை உறவும் கலைஞர் விருதும்

கலைஞரைப் பார்த்ததே பெரிய பேறென்று இருக்க, அவரோடுப் பேச, பழக, நிகழ்ச்சிகள் சிலவற்றில் கலந்துகொள்ளப் பரிசுகள் பெற பாராட்டப்பட எத்தனை கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்று நான் என்னை பெருமையாகக் கருதாத நாளில்லை. பெரிதாக அவருக்கு எப்படி நன்றி தெரிவித்து விடமுடியும்? கலைஞர் பெயரால் 100 கவிஞர்களுக்கு விருது வழங்கி, பெறற்கரிய பேறு பெற்றதே என் வாழ்நாள் மகிழ்ச்சி.

**தொகுப்பு :**
**எஸ்.கதிரேசன்**

....பகிர்வார்கள்

## சமஸ்கிருதம் கட்டுக் கதையா?

சமஸ்கிருதம் பற்றிய பெருமைகள் என்று நமக்குச் சொல்லப்படு பவை எவை? அவையெல்லாம் உண்மையா அல்லது கட்டுக்கதை களா? என்று ஆங்கிலத்தில் வரலாற்று ஆய்வாளர் தேவ்தத் பட்நாயக் பல தகவல்களைப் பகிர்ந்துள்ளார். பலராலும் பகிரப்பட்டு வரும் அந்தப் பதிவு.

1. சமஸ்கிருதம் என்ற மொழி 5,000 ஆண்டுகளுக்கு முன்பு இல்லை. பின்வந்தவர்கள் கட்டிய கற்பனைக் கதைகளில் மட்டுமே சமஸ்கிருதம் வாழ்ந்து வருகிறது.
2. வேதங்களில் உள்ள சமஸ்கிருதமும், இராமாயணத்தில் இராவணனும் அனுமனும் பேசும் சமஸ்கிருதமும் வேறுபட்டது.
3. சமஸ்கிருதம் கற்பனைக் கதைகளுக்குப் பெயர் பெற்றது.
4. பிராமணர்களால் எழுதப்பட்ட சமஸ்கிருத நாடகங்களில், பெண்களும் வேலைக்காரர்களும் தாழ்ந்த மொழியாகக் கருதப்பட்ட பிராகிருதத்தைப் பேசினர்.
5. சமஸ்கிருதம் அனைத்து இந்திய மொழிகளுக்கும் தாய் அல்ல. ஹரப்பா, ஆரிய மொழிகளின் இணைப்பில் சமஸ்கிருதம் பிறந்திருக்கலாம்.
6. திராவிட மொழிகள் சமஸ்கிருதத்தில் இருந்து பிறந்தவை அல்ல.
7. பெரும்பாலான இந்துக்கள் தாங்கள் வணங்கும் கடவுள்களைப் பற்றி, தங்கள் தாய்மொழிகளில் இருந்து கற்றுக்கொள்கிறார்கள். சமஸ்கிருதம் அவர்களுக்குத் தேவைப்படுவதில்லை.
8. சாதாரண மக்களைச் சென்றடைய விரும்பிய பக்தி இயக்கத் துறவிகள் சமஸ்கிருதத்தைக் கைவிட்டனர், ஏனெனில், சமஸ்கிருதம் மேல்தட்டு, உயர்சாதி மக்களின் மொழியாக மட்டுமே இருந்தது.
9. சமஸ்கிருதத்திற்குச் சொந்த வரிவடிவம் (எழுத்து) இல்லை.
10. இந்திய அறிவு நூற்றுக்கணக்கான இந்திய மொழிகளில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. சமஸ்கிருதம் அதன் ஒரு சிறிய பகுதி மட்டுமே"

-தமிழில் சு.விஜயபாஸ்கர்

## :.ப்ளாஷ்பேக்



க.மகேந்திரன்



### 'முரசொலி'க்கு ஆயுள் சந்தா!

2009-ஆம் ஆண்டு காவேரிப்பட்டினம் ஒன்றியக் கழகச் செயலாளராக இருந்த நான், அன்றைய கழக இளைஞர் அணிச் செயலாளரும், இன்றைய கழகத் தலைவருமான அண்ணன் தளபதியாரிடம் முரசொலி ஆயுள் சந்தா ரூ.7 லட்சத்து 50 ஆயிரம் காவேரிப்பட்டினம் ஒன்றிய அளவில் சேகரித்து வழங்கினேன். அன்றைய மாவட்ட அவைத் தலைவர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.வி.எஸ்.வெங்கடேசன் அவர்கள் உடன் இருந்தார்.

**– க.மகேந்திரன், ஒன்றியக் கழகச் செயலாளர், காவேரிப்பட்டினம் கிழக்கு ஒன்றியம், கிருஷ்ணகிரி கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### அவர்தான் பேராசிரியர்!

1938-ஆம் ஆண்டு மாயவரத்தில் 'இராமையா' என்ற மாணவர் பேரறிஞர் அண்ணாவின் பேச்சை முதன்முதலாக கேட்கிறார். அண்ணாவின் உரைவீச்சில் உந்தப்பட்ட அந்த மாணவர், தான் பயிலும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில், எப்படியாவது அண்ணாவைப் பேச வைக்க வேண்டுமென்று முயற்சிக்கிறார். அது நடக்காவிட்டாலும், தி.மு.க.வில் அண்ணா வகித்த பொதுச்செயலாளர் பதவிக்கே உயர்ந்தார். அவர்தான் பேராசிரியர் க.அன்பழகன்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

669

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131